DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

Calender	:	CC No. 39/2022
Miscellaneous	:	
Preliminary Register	:	
Sessions	:	
Deposition of Witness for	:	Prosecution P.W.1 Defence

பெயர்	:	ஜேக்கப் சௌந்தர்ராஜன்	தொழில்	:	
தகப்பனார் பெயர் / கணவர் பெயர்	:	தாமஸ் ஜெயராஜ்	ஜாதி	:	
கிராமம்	:		இனம்	:	
தாலூக்கா	:		வயது	:	
Mail ID	:		Mobile No.	:	

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.08.2024

முதல் விசாரணை

நான் கொசவம் பாளையத்தில் வசித்து வருகிறேன். உரக்கடையில் வேலை செய்து வருகிறேன். நான் எனது தாத்தா பாட்டியுடன் குடியிருந்து வருகிறேன். என் தம்பிகளும் என்னுடன் தான் உள்ளனர். நான் பிஎஸ்சி கம்பியூட்டர் சயின்ஸ் படித்துள்ளேன். கடந்த 07.03.2021 ம் தேதி வேலைக்கு சென்று விட்டு மதியம் 1.15 மணிக்கு கடையில் வேலை முடித்து விட்டு நானும் என் பிரண்டு ராஜன் என்பவரும் அவரது இரு சக்கரவாகனத்தில கொசவம் பாளையம் செல்வதற்காக சென்று கொணடிருந்த போது என் தம்பி உடுமலைப்பேட்டையில் வேலை செய்து விட்டு எங்களுக்கு முன்னால் எனக்கு சொந்தமான பல்சர் 220 வாகனம் TN 78 S8498 என்ற வாகனத்தில் முன்னால் சென்று கொண்டிருந்தார். என் கண்ணுக்கு எட்டும் தூரத்தில் பெதப்பம்பட்டி சாலையில் வெள்ளியம் பாளையம் பிரிவு அருகில் TATA ACE வாகனம் வேகமாக வந்து டப் என்று என் தம்பியின் இருசக்கர வாகனம் மீது மோதிவிட்டார். அதில் என் தம்பி சுமார் பறந்து சென்று சுமார் 2 அடி தூரம் சென்று விழுந்தார். அதில் பின்

மண்டையில பெரிய காயம் ஏற்பட்டது. இரத்தம் அதிகமாக சென்றது. நானும் என் நண்பர் ராஜா சென்று போய் பார்த்த போது என் தம்பிக்கு பேச்சு மூச்சு இல்லை உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் பரிசோதித்த மருத்துர்கன் என் தம்பி வரும் வழியிலேயே இறந்து விட்டாதாக கூறினார். பின்னர் அன்றையதினம் மாலை 5.00 மணியளவில நான காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படம புகார் நான கைப்பட எழுதியது தான் அதில் உளள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ. 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என் தம்பியின் பிரேத விசாரணை நடத்தி மருத்துவ பரிசோதனைக்கு பின் உடலை கொடுத்தானர எங்கள் வழக்கப்படி நல்லடக்கம் செய்தோம். TATA ACE வாகனத்தின எண் TN 67 AJ 0481 ஆகும். எனது அப்பா அம்மா அவர்களுக்குள் ஏற்ப்பட்ட கருத்து வேறுபாடு காரணமா சிறு வயதிலேயே பிரிந்து சென்று விட்டனர். எனது தாத்தா பாட்டியுடன் உள்ளோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். TATA Ace வாகனத்தை ஓட்டியவர் ஆஜர் எதிரி தான்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நீங்கள் பெதப்பம் பட்டி உரக்கடையில வேலை செய்கிறிர்கள் என்றால் சரிதான். உங்கள் தம்பி உடுமலையில் உள்ள உரக்கடையில வேலை செய்கிறார் என்றால் ஆமாம். புகாரில் எந்நத உரக்கடை எனறு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். பொதுவாக வேலை நேரம் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை என்றால் சரிதான், ஆனால்அன்று ஞாயிற்று கிழமை என்பதால் அரை பொழுதுஇருந்தது. உங்கள் தம்பிக்கு 17 வயது என்றால் இல்லை 18 வயது. உங்கள் தம்பி இன்னும் லைசன்ஸ் எடுக்கவில்லை என்றால் LLR இருந்தது. பொதுவாக லைசன்ஸ் இல்லாமல் ஓட்ட கூடாது என்பது தெரியும் என்றால் ஆமாம். அந்த வாகனம உங்கள் பெயரில் தான் உள்ளது என்றால் ஆமாம்.
2. வாகனத்தில் செல்லும் போது ெஹல்மேட் அணிவது பற்றி தெரியுமா என்றால் தெரியும். அந்த சம்பவம் நடந்த போது உங்கள் தம்பி ெஹல்மெட் அணிந்திருந்தால் விபத்தில் அதிக காயம் ஏற்பட்டு இருக்காது என்றால் ெஹல்மெட் போட்டிருந்ததார். வழக்குக்காக பொய் கூறிகிறிர்கள் என்றால் இல்லை. உடுமலை– பெதப்பம்பட்டி ரோடு குறுகிய வளைவுகள் உள்ள ரோடு என்றால் ஆமாம். வளைவுகளில் எச்சரிக்கை பலகைகள் இருந்தது என்றால் சரிதான். வளைவுகளில் திரும்பும் போது குறிப்பிட்ட இடத்தில் வேகமாக ஏறி செல்லும் என்றால் ஆமாம். அந்த இடத்தில் வேகத்தை குறைக்காமல் சென்றார் எனறால் இல்லை. உங்களுடைய பல்சர் 220 சிசி வேகம் அதிகமுள்ள வாகனம் என்றால் ஆமாம்.

3. மதியம் 12.00 மணிக்கு ஏரிபாளையத்தில எனது தம்பியை சந்தித்து பேசினிர்கள் என்றால் ஆமாம். சம்பவ நடந்த இடத்திற்கும் மற்றும் உடுமலைக்கும் எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால் 20 நிமிடம் ஆகும். நீங்கள் அன்றைய தினம் என்ன வேலையாக உடுமலை வந்திர்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் இல்லை. வாகனத்தில் டிஸ்க் பிரேக்கை சரியான முறையில் பிரேக் அடிக்கவில்லை என்றால் இழுத்து செல்லும் என்றால் சரிதான். 12.00 மணிக்கு உடுமலையில் கிளம்பியவர் 1.15 மணி வரை எங்கு இருந்தார் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அடிப்பட்ட நபரை ஆம்புலன்ஸ மூலம் வந்தவரை அரசு மருத்துவமனையில் பார்த்திர்களா என்றால் ஆமாம். அரசு மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி கொடுதத போது வந்திர்களா என்றால் ஆமாம். நீங்கள் ஆம்புலன்ஸ்ஸில் வரவில்லை என்றால் ஆமாம் ஏற்றிவிட்டேன்.

4. சம்பவ இடத்தில் இலலை என்றாலும் உண்மையில் இருந்திருந்தால் ஆம்பிலன்ஸ்ஸில் உடன் சென்றிருப்பிர்கள் என்றால் சரியல்ல. உங்கள் சகோதரர் வண்டியை அதிவேகமாக ஓட்டி சென்று எதிர்புறம் இடதுபுறமாக மெதுவாக வந்த எதிரி வாகனத்தின் வலது புறத்தில் மேதி கீழே விழுந்துவிட்டார் அந்த இடத்தில் நீங்கள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியானவர் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி சந்தோஷ் என்ற ஆம்புலன்ஸ் டிரைவர் தான் மருத்துவமனைக்கு சேர்த்தார் என்றார் சரியல்ல. பொதுவாக கிழக்கில் இருந்து மேற்காக வளையில் இடதுபுறமாகத்தான் செல்லவேண்டும் ஆனால் உங்களது சகோதரர் வலதுபுறமாக சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நீங்கள் உடுமலை வந்து வீட்டிற்கு செல்ல வேண்டி இருந்தால் உங்கள் தம்பியுன் சென்றிருப்பிர்சகள் என்றாலும் உங்கள் நண்பருடன் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. உங்கள் நண்பர் என்ன செய்கிறார் எ ன்றால் கடை வைத்துள்ளார். 5 வருடமாக தெரியும் சாட்சி 3 அக்கா சாட்சி–4 அம்மா என்றால் சரிதான். டேனியல் உங்கள் உறவினரா என்றால் மாமா, ஜெயக்குமார் எங்கள் மாமா என்றால் சித்தப்பா, சாட்சி–7 மற்றும் 8 உங்கள் ஊர்காரர் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கூட்டம் இருந்தது என்றால் இல்லை. உண்மையிலேயே எதிரி மீது எந்த தவரும் இல்லை அவர் மோட்டார் வாகன விதிப்படி தான் சரியாகத்தான் வந்தார் உங்கள் தம்பி தான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல், கவனக்குறைவாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

நீங்க எவ்வளவு துாரத்திற்கு பின்னால் சென்றிர்கள் என்றால் 250–300 மீட்டர் இருக்கும். சத்தம் கேட்டு பார்த்திர்கள் என்றால் இல்லை.

ஆம்புலன்சிற்கு யார் போன் பன்னது என்றால் நான் தான். தனியார் ஆம்புலன்சா என்றால் ஆமாம். அவர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நீங்களும் உங்கள் தம்பியும் சந்திக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

Calender	:	CC No. 39/2022
Miscellaneous	:	
Preliminary Register	:	
Sessions	:	
Deposition of Witness for	:	Prosecution P.W.2 Defence

பெயர்	:	ராஜா	தொழில்	:
தகப்பனார் பெயர் / கணவர் பெயர்	:	உத்தமராஜ்	ஜாதி	:
கிராமம்	:		இனம்	:
தாலூக்கா	:		வயது	:
Mail ID	:		Mobile No.	:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.08.2024

முதல் விசாரணை

நான் காந்திநகரில் வசித்து வருகிறேன். உத்தமன் ஸ்டோர் என்ற பெயரில் மளிகை கடை வைத்துள்ளேன். கடந்த 07.03.2021 ம் தேதி எனது நண்பரும் உரக்கடையில் வேலை செய்யும் ஜேக்கப் சௌந்தர் ராஜனும் அவரது வீட்டிற்கு செல்வதற்காக எனது இருசக்கர வாகனத்தில் அழைத்து கொண்டு சென்றிருந்தேன். ஏரிப்பாளையம் ரோட்டில் கொசவம் பாளையம் சென்று கொண்டிருந்த போது ஜேக்கப் சௌந்தர் ராஜனின் தம்பி ரூபன் தாவிர் வேலையை முடித்து விட்டு எங்களுக்கு முன்னால் அவர்களுக்கு சொந்தமாக பஜாஜ் பல்சர் 220 சிசி வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். பெதப்பம்பட்டி வழியாக வெள்ளியம் பாளையம் பிரிபு அருகில் சென்று சொண்டிருந்த போது உடுமலை நோக்கி வந்த டாடா ஏஸ் வாகனம் கேர்லெஸ்ஸாக வந்து பல்சர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டது. அதில் ஜேக்கப் சௌந்தர் ராஜன் தம்பிக்கு தலையில் பலத்த காயம்இடது காலில் மணிக்கட்டில் சிராய்பு காயம் ஏற்பட்டிருந்தது. உடனே உடுமலை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு வந்து சேர்த்தோம். மருத்துவர்கள் பரிசோதித்து விடடு வரும்

வழியிலேயே இறந்து விட்டதாக கூறினார். இது சம்பந்தமான நண்பர் புகார் கொடுத்திருந்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நீங்கள் எத்தனை வருடமாக உடுமலையில் கடை வைத்துள்ளிர்கள் என்றால் 20 வருடமாக. புகார் கொடுத்தவரை எத்தனை வருடமாக பழக்கம் என்றால் 10 வருடமாக பழக்கம். பொதுவாக காலையில் கடை திறந்தால் மாலை வரை கடையில் இருப்பது வழக்கம் என்றால் சரிதான். எதற்காக ஜேக்கப் சௌந்தரராஜன் உடன் சென்றிர்கள் என்றால் அவர் சென்ற அரை மணிநேரத்தில் சென்றேன். எப்போது எங்கிருந்து சென்றார் என்றால் உடுமலையில் இருந்து அவர் வண்டியில் பிரச்சனை என்று 01.15–1.30 மணிக்கு சென்றார். அப்போது எதிரியை அ.சா.1 ன் தம்பியுடன் செல்ல சொன்னிர்களா என்றால் இல்லை. சம்பவ இடம் உடுமலையில் இருந்து எவ்வளவு துாரம் என்றால் 10 கி.மீ. உடுமலை– பெதப்பம்பட்டி ரோடு வளைவுகள் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். ஒருசில வளைவுகள் ஆபத்தான வளைவுகள் என்று அறிவிப்பு பலகை உள்ளது என்றால் சரிதான். வளைவுகளில் செல்லும்போது வேகமாக செல்லும்போது வலதுபுறம் ஏறி செல்லும் என்றால் ஆமாம்.

2. அ.சா.1 ன் தம்பி முறையாக வாகன ஓட்டுநர் உரிமம் எடுத்து வாகனத்தை ஓட்டி இருந்தால் கவனமாக சென்று திரும்பி இருப்பார் என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அதிவேகமாக சென்று எதிர்புறமாக இடது புறமாக வந்த வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால் ஆமாம். இறந்துபோனவர் சரியான பாதையில் சரியான வேகத்தில், தலைக்கவசம் அணிந்து சென்றிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவு இந்த விபத்திற்கு காரணம் இல்லை என்றால் இரண்டு பேரும் காரணம். நீங்களும் அ.சா.1 ம் உறவினரும் நண்பர் கிடையாது நீங்கள் அ.சா.1 க்கு வியாபார ரீதியில் பழக்கம் என்றால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

Calender	:	CC No. 39/2022
Miscellaneous	:	
Preliminary Register	:	
Sessions	:	
Deposition of Witness for	:	Prosecution P.W.3 Defence

பெயர்	:	ஆசிர்வாதம்	தொழில்	:	
தகப்பனார் பெயர் / கணவர் பெயர்	:	தாவிது நாடார்	ஜாதி	:	
கிராமம்	:		இனம்	:	
தாலூக்கா	:		வயது	:	
Mail ID	:		Mobile No.	:	

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.08.2024

முதல் விசாரணை

நான் கொசவம் பாளையத்தில வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி வருகிறேன். இதற்கு முன்பு மளிகை கடை வைத்துள்ளேன். எனது மூத்த மகன் சோபாவின் மகன்கள் ரூபன் தாவிது, ரூபன் தர்மராஜ், ஜேக்கப் சௌந்தர் ராஜன் ஆகிய மூவரையும் நான் தான் வளர்த்து வருகிறேன். என் மகளும் அவர கணவரும் அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சிறு வயதிலேயே விட்டுவிட்டு சென்றனர். எனது பேரன் ஜேக்கப் சௌந்தர் ராஜன் போன் மூலமாக எனக்கு தகவல் கூறினார். எனது மற்றொரு பேரன் ரூபன் தாவிது எங்களுக்கு சொந்தமனா இருசக்கர வாகனத்தில வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வரும் போது வெள்ளியம் பாளையம் பிரிவில் டாடா ஏஸ் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னதை கேட்டு நான் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று போய் பார்த்த போது மருத்துவர்கள் எனது பேரன் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக கூறினார்கள் இது சம்பந்தமாக மூத்த பேரன் புகார் கொடுததார் மறுநாள் மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடித்து உடலை கொடுத்தனர். எங்கள் வழக்கப்படி

நல்லடக்கம் செய்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. விபத்து எங்கு நடந்தது எப்படி நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோனவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை ஓட்டுநர் உரிமம் இல்லை LLR உள்ளது. இறந்துபோனவரின் கவனக்குறைவுதான் விபத்திற்கு காரணம் என்றால் இல்லை. இறந்துபோனவர் தலைக்கவசம் அணிந்து சென்றிருந்தால் உயிர் இழப்பை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. உறவினர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

Calender	:	CC No.39 /2022
Miscellaneous	:	
Preliminary Register	:	
Sessions	:	
Deposition of Witness for	:	Prosecution P.W.4 Defence

பெயர்	:	டேனியல் ஆபிரஹாம்	தொழில்	:	
தகப்பனார் பெயர் / கணவர் பெயர்	:	ஆசிர்வாதம்	ஜாதி	:	
கிராமம்	:		இனம்	:	
தாலூக்கா	:		வயது	:	
Mail ID	:		Mobile No.	:	

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.08.2024

முதல் விசாரணை

நான் கொசவம் பாளையத்தில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் மேனஜராக வேலை செய்து வருகிறேன். நானும் எனது அப்பாவும் எனது மூத்த அக்கா சோபாவின் மகன்களை வளர்த்து வருகிறோம். ஜேக்கப் சௌந்தர் ராஜன் உடுமலை உரக்கடையில் பணிபுரிந்து வந்தார் ரூபான் தாவிதும் வேறொரு உரக்கடையில வேலை செய்து வருகிறார் எனது அக்கா மகன் ஜேக்கப் சௌந்தர் ராஜன் 07.03.2021 ம் தேதி மதியம் எனக்கு போன் செய்து வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வரும் பொழுது வெள்ளியம் பாளையம் பிரிவு அருகில் டாடா ஏஸ் வாகனம் மோதி ரூபன் தாவிதுக்கு விபத்து ஏற்பட்டது என்று தகவல் கூறினார். உடனடியாக நான் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று போய் பார்த்த போது மருத்துவர்கள் எனது பேரன் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக கூறினார்கள் இது சம்பந்தமாக மூத்த பேரன் புகார் கொடுததார் மறுநாள் மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடித்து உடலை கொடுத்தனர். எங்கள் வழக்கப்படி நல்லடக்கம்

செய்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. 1. விபத்து எங்கு நடந்தது எப்படி நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோனவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை ஓட்டுநர் உரிமம் இல்லை LLR உள்ளது. இறந்துபோனவரின் கவனக்குறைவுதான் விபத்திற்கு காரணம் என்றால் இல்லை. இறந்துபோனவர் தலைக்கவசம் அணிந்து சென்றிருந்தால் உயிர் இழப்பை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. உறவினர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.